நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே ஒரு அதிகாரி மிகத் தீவிர மாக அந்த முயற்சியிலே இறங்கியதை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபோன்று அத்தகைய கொத்தடிமை முறையை ஒழிக்கின்ற முயற்சியிலே இறங்குகிற எந்த அதிகாரி யாக இருந்தாலும், அவர்கள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். அதற்கு வாய்ப்பாக எந்த இடத்தில் அந்த முறை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் மாத்திரமல்ல, அவையிலே உள்ள எந்த உறுப்பினரும் அந்த நிலை எங்கிருந்தாலும் அதை அரசுக்குத் தெரிவித்தால், அது அரசு நடவடிக்கை எடுக்க நல்ல வழிவகை வகுப்பதாக இருக்கும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கொத்தடிமைகளுக்கு உதவியாக இருந்த அதிகாரியை அப்போதிருந்த அரசாங்கம் மாற்றியது. இப்போது இருக்கிற அரசாங்கம் அல்ல. ஆகவே இப்போது இருக்கக்கூடிய அரசாங்கம், அத்தகைய அதிகாரிகளை ஊக்கப்படுத்தும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் எந்த எந்த இடத்திலே அந்த மாதிரி யான முறைகள் இருக்கின்றன என்ற தெளிவான குறிப்புகள் என்னிடத்திலே இப்போது இல்லை. அதுகுறித்த விவரங்களை நான் முதலமைச்சருக்கே சமர்ப்பிக்கிறேன். அதற்கு முன்பாக அரசும் தன்னுடைய முயற்சியாக முன்முயற்சி எடுத்து, சம்பந் தப்பட்ட துறை அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, அதைக் கவனித்தால், அவர்களுக்கே அந்தத் தகவல் கிடைக்கும் என்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(விடை—இல்லை.)

பேரணாம்பட்டு ஆதி திராவிடர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

*3441. திரு. வெ. கோவிந்தன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பேரணாம்பட்டு ஆதி திராவிடர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வடாற்காடு மாவட்டம் பேரணாம்பட்டு ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1990 சனவரி 19]

திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு நகரைச் சுற்றியுள்ள பெரும்பாலான கிராமங்கள் காலனி வீடுகளைக் கொண்டது. குறிப்பாக ஆதி திராவிட மாணவர்கள் எட்டாவது வகுப்பு வரை படித்துவிட்டு, மேற்கொண்டு படிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அதைப் போக்க பேரணாம்பட்டில் உள்ள அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக அரசு உயர்த்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் விடுவித்த கேள்வி முறையானதுதான். ஆனால் கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகள் எல்லாம் சிறப்பிழந்து இருக்கிற ஒரு சூழ்நிலையின் காரணமாக, அந்தப் பள்ளிகள் எல்லாம் பழுது பார்க்கவேண்டிய நிலைமையில் இருப்பதை முன்னிட்டு, பள்ளிகளை எல்லாம் ரிப்பேர் செய்துவிட்டு, மீண்டும் பள்ளிகளை ஆரம்பிக்கவும் அவற்றின் நிலைகளை மேல்நிலைப் படுத்தவும் அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டில் ஆதி திராவிட மாணவர் விடுதி வாடகைக் கட்டிடத்தில் உள்ளது. அதற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கட்டிடங்களையும் அரசினர் விடுதிகளாகக் கட்டவேண்டும் என்றுதான் அரசு நினைக்கிறது. ஆனால் நிதிநிலை சரியில்லாத சூழ்நிலையின் காரணமாக இந்த அரசினுடைய பரிசீலனையில் அது இல்லை. இந்த ஆண்டு குறிப்பாக 25 புதிய விடுதிகளைக் கட்ட ஆரம்பித்திருக்கிறோம். கூடியமட்டிலும் புதிய விடுதிகளை ஆரம்பிக்க அரசு முனைகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகிரியில் தாலுகா அரசு மருத்துவமனை.

*** 575. திரு. ஆர். ஈஸ்வரன் :**
மாண்புமிகு மக்கள்நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிவகிரியில் தாலுகா அரசு மருத்துவமனை ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் சிவகிரியில் தாலுகா அந்தஸ்துள்ள மருத்துவமனை நிறுவ செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.